REGD. No. M. 6311 PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 241

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 10உ செவ்வாய் (23—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 11உ புதன் (24—3—54)

புது அரசியல் நாடகத்திற்கு ஆட்கள் தேடுகிறது பிரெஞ்சு அதிகார வர்க்கம்

குபேர் மந்திரி சபையை ஒழித்து விட உத்தேசம்

என்றும் உள்ள அடக்கு முறை புது விசையுடன் இயங்குகிறது

பாரிஸ், மார்ச் 22—

பிரெஞ்சு மந்திரி சபையைச் சேர்ந்த முக்கிய மந்திரிகள் இன்றிரவு கூடி பிரெஞ்சிந்தியாவை இணைக்கும் பிரச்சினையைப் பற்றி டில்லிக்கு ராஜதந்திரக் குறிப்பு ஒன்றை அனுப்புவதென முடிவு செய்தனர்.

பிரெஞ்சிந்தியாவில் சர்வ மக்கள் வாக்கெடுப்பு நடத்த பிரான்ஸ் தயாரென்றும், வாக்கெடுப்பு நடத்துமுன், இந்தியா, பொருளாதார நிர்ப்பந்தத்தையும், வர்த்தகக் கட்டுப்பாடுகளையும் ரத்து செய்ய வேண்டுமென்றும் பிரான்சு கோருகிறது.

புதுவை, காரைக்கால், மாகி, ஏனம் பகுதிகளிலுள்ள தலைவர்கள் சீக்கிரமே சந்தித்து பிரெஞ்சிந்தியப் பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்தித் திட்டம் தயாரிப்பரென்று தெரிகிறது.

பிரெஞ்சிந்தியப் போலீசார் பிரிட்டிஷ் இணைப்புக் குழுவுடன் சேருமென்று பயந்து, நம்பகமான சிலருக்குத் தவிர மற்ற போலீசாருக்கு துப்பாக்கி, தோட்டாக்களைத் தருவதை இங்குள்ள நிர்வாகம் நிறுத்திவிட்டது.

நிலைமையை அறிய அதிகாரி வருகை

புதுச்சேரியிலுள்ள அரசியல் நிலைமையை ஆராய பிரெஞ்சு சர்க்காரின் உயர்தர அதிகாரியான இன்ஸ்பெக்டர்—ஜெனரல் இங்கு வந்து சேருவாரெனத் தெரிகிறது.

குபேர் மந்திரி சபை கலைக்கப்படும்?

பாரிஸிலுள்ள பிரெஞ்சு சர்க்கார் உத்திரவுப்படி தற்போதுள்ள குபேர் குழுவின் மந்திரி சபை கலைக்கப்பட்டு விடலாமெனக் கருதப்படுகிறது.

புதிய கட்சி ஏற்படும்?

சோஷலிஸ்ட் கட்சிக்குப் பதில் ஒரு புதிய கட்சியை ஏற்படுத்த பிரெஞ்சிந்திய கமிஷனர் முயற்சி செய்து வருகிறார். இதற்காக போலீஸ் அதிகாரிகள் உதவியுடன் பல முக்கியஸ்தர்களுடன் (-ணக்காரர்) தொடர்பேற்படுத்திக் கொள்ள முயற்சித்து வருகிறார்.

★

'அமைதியான முறையில் அதிகார மாற்றம்."

இந்தியாவின் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 22—

"பிரெஞ்சிந்தியா, இந்தியாவுடன் இணைய வேண்டுமென அப்பகுதிமக்கள் விரும்புவதை நிரூபிக்க அங்கு தானாக ஏற்பட்டுள்ள பலமான இணைப்பு இயக்கத்தை விட வேறு எவ்வித அத்தாட்சியும் இருக்க முடியாது,"

என்று மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் நேரு தெரிவித்தார். அவர் மேலும் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"அடுத்த நடவடிக்கை, அமைதியான முறையில் அதிகார மாற்றம்" என்றே நாம் நம்புகிறோம்.

மார்ச் %-ம் தேதி தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடக்க பலாத்காரத்தை பிரயோகம் செய்ததைக் கண்டித்து ஆட்சேபக் குறிப்பொன்றை தாக்கல் செய்த பின் எவ்வளவோ காரியங்கள் நடந்திருக்கின்றன வென்றும், கிராமங்களில் இந்த இயக்கத்தைப் பலாத்காரத்தின் மூலம் அடக்கப் பிரெஞ்சிந்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறார்கள் என்பது போன்ற தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திராவிட சட்ட சபைக் கட்சி வெற்றி

ஐ. மு. - வுக்கு 205!

லீக் 7-ஐத் தாண்டவில்லை!

டாக்கா, மார்ச் 22—

பாகிஸ்தான் கிழக்கு வங்கத் தேர்தலில் 309 ஸ்தானங்கள் உள்ள சபையில் ஐக்கிய முன்னணி 205 ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது.

இதுவரை முஸ்லீம் லீகுக்கு 7 ஸ்தானங்கள்தான் கிடைத்திருக்கின்றன; இன்னும் 45 ஸ்தானங்களின் முடிவுகள்தான் தெரிய வேண்டும்."

ஆலன் தரும் உறுதி!

பம்பாய், மார்ச் 22—

"பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவும் ஆயுதங்கள் ஆக்ரமிப்புக்கு உபயோகிக்கப்படாமல் செய்ய அமெரிக்கா எல்லாவித நியாயமான எச்சரிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும்," என்று இங்கு ஒரு கூட்டத்தில் அமெரிக்க பிரதிநிதி ஜார்ஜ் ஆலன் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி தோல்வி

—(:)—

சென்னை மேல் சட்டசபை தேர்தல் முடிவு

சென்னை, மார்ச் 23—

நேற்று நடைபெற்ற சென்னை மேல் சட்டசபை தேர்தல் வாக்கெடுப்பு முடிவு விவரம்:—

விருதுநகர் திரு. வி. வி. இராமசாமி	(திராவிட சட்டசபைக் கட்சி)	39
சேலம் திரு சுப்பிரமணியம்	(த. உ. கட்சி)	27
திரு. நரசப்பையா	(காங்கிரஸ்)	47
திரு அண்ணாமலைப்பிள்ளை	(காங்கிரஸ்)	42
திரு. கிருஷ்ணமூர்த்தி	(காங்கிரஸ்)	41
திரு நாராயணன் நாயர்	(கம்யூனிஸ்ட்)	28

கம்யூனிஸ்டு கட்சி தோழர் தவிர மற்ற ஐவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

குறிப்பு:—சேலம் சுப்பிரமணியம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இரண்டாம் வாக்குகளும் சேர்த்து கணக்கிடப்பட்டதால் அவர் வெற்றி பெற்றார்.

ஆச்சாரியாருக்கு பண்டிதர் அபயம்!

உள்நாட்டு அமைச்சர் பீடத்தில் சி. ஆர். ஏற்றப்படுவாராம்!

அவரை அருகிலேயே வைத்திருக்க பிரதமர் விழைகிறாராம்!

புதுடில்லி, மார்ச் 22—

இந்திய அரசாங்க உள்நாட்டு அமைச்சராக இருக்கும் டாக்டர் கட்ஜூவுக்குப் பதிலாகத் திரு. சி. இராசகோபாலாச்சாரி (சென்னை முதல் அமைச்சர்) நியமிக்கப்படலாம் என்று இங்குத் தீவிரமாக வதந்திகள் உலவுகின்றன.

இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, டாக்டர் கட்ஜூ மிகவும் வயதானவராகி தற்போதைய பாராளுமன்ற முறைக்கு ஏற்றவராக இல்லை என்று கருதப்படுவது, பிறர் தம்மைக் குறை கூறுவதை டாக்டர் கட்ஜூ வெறுக்கிறார் என்பது மற்றொரு காரணம்.

சென்னை முதலமைச்சர் பதவியிலிருந்து திரு. இராசகோபாலாச்சாரி மார்ச் இறுதியிலோ அல்லது ஏப்ரலிலோ விலகுவார் என்று கருதப்படுவது இன்னொன்று.

ஆச்சாரியாரின் திறமையையோ அவரது சேவையையோ இழக்கப் பண்டித நேரு விரும்பவில்லை. தனது அருகிலேயே அவரை ஆலோசனைக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறார்.

ஆனால், ஆச்சாரியார் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஆனால், நேருவின் வேண்டுகோளை இவ்விஷயத்தில் அவர் புறக்கணிக்க மாட்டார் என்று கருதப்படுகிறது. ('த.நா.')

செயற்கைப் பட்டு, சோப், பாதரட்சைக்கு வரிச் சலுகை!

நிதி மந்திரி அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 22—

மின்சார விசையில்லாத பாதரட்சைத் தொழில் இனத்தில் அன்றாடம் 49 தொழிலாளிகள் வேலை செய்யும் பாக்டரிகளுக்கு வரி விலக்கு வரம்பை உடனடியாக உயர்த்துகிறேன் என்றும், ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் முதல் தேதிக்கு மேல் எந்த பாக்டரியிலிருந்தும் முதல் முதலாக எடுக்கப்படும் 125 டன் சலவை சோப்புக்கும், 25 டன் உடல் சுத்தி சோப்புக்கும் வரி கிடையாது. என்றும்,

செயற்கை பட்டுநூலின் இருந்து வரும் எக்சைஸ் வரி கெஜத்துக்கு 0—1—6 அணவை சதுர கஜத்திற்கு 0—1—0 அணாவாகவும் குறைக்கப்பட்டிருப்பதாக நிதிமந்திரி அறிவித்தார். மேலும் கூறுகையில் பாக்கு மீது விதிக்கப்படும் வரியை குறைப்பதற்கான முகாந்திரமில்லை யென்று அறிவித்தார்.

பாதிக்காது?

லாகூர், மார்ச் 22—

"பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிப்பதென்கிற யு. எஸ். சர்க்கார் முடிவைக் கிழக்கு வங்க தேர்தல்கள் பாதிக்காது," என்று பாகிஸ்தானில் அமெரிக்க ஸ்தானிகர் தெரிவித்தார்.

'ஆச்சாரியார்' நாடகக்கதை வசனம் பறிமுதல்

உறந்தை நாடகக் குழுவினர்மீது சர்க்கார் பார்வை!

உறந்தை, மார்ச் 22—

12—3—54-ல் திருச்சி தேவர் மன்றத்தில் உறந்தை நாடகக் குழுவினர் நடித்துக் காட்டிய, உறந்தை உலகப்பன் தீட்டிய 'ஆச்சாரியார்' எனும் நாடகத்தின் கதை, வசன புத்தகத்தை, திருச்சி போலீசார் 19-3-54ல் நாடகக் குழுவிலிருந்து பறிமுதல் செய்து சென்றனர்.

நாடகத்திற்கு நல்ல வரவேற்பு இருந்ததுடன், மக்களின் கருத்தைக் கவரும் வகையில் கதை இருந்ததாலும், ஆட்சியாளரின் அநீதியான போக்கை சுட்டிக் காண்பித்ததாலும், ஒரு சில அரசியல் கட்சிகளின் பிற்போக்கைக் கண்டித்ததாலும், வைதீகக் கோட்டையைத் தகர்க்கும் அளவுக்கு கருத்திருந்த காரணத்தாலும் நாடகக் கதை, வசனங்களை போலீசார் பறிமுதல் செய்திருப்பதாக தெரிய வருகிறது. (ந. நி)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—3—1954 செவ்வாய்

கிழக்கு வங்க முடிவு!

அனைத்து இந்திய தேசியக் காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகளே, இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் விடுதலைக்குப் பெரிதும் துணை புரிந்தன என்பது வரலாறு. இதைப் பெருமையாகக் கொள்ளவும், புகழ்ச்சியாகப் பிறரிடம் கூறிக்கொள்ளவும், காங்கிரஸ் கட்சியினருக்கு உரிமையும் இருக்கிறது. தங்கள் கிளர்ச்சியாலும் முயற்சியாலுந்தான் அரசியல் விடுதலை கிடைத்தது என்று உள்ளம் பூரிக்கும் வேளையிலேயே, அவர்களுக்கிருந்த குறுகிய புத்தியினாலும், மதக் கண்ணோட்டத்தினாலும், பலக் குறைவினாலுமே பாகிஸ்தான் உருவாகவும் முடிந்தது என்பதையும் காங்கிரஸ் கட்சியினர் முணுமுணுக்காமல், தயங்காமல் ஒப்புக்கொள்ள வேண்டும். இதுவும் வரலாறு எடுத்துக்காட்டும் உண்மையாகும். ஆனால், காங்கிரஸ் கட்சியினர், இந்த உண்மையை மட்டும் ஒப்புக்கொள்ள மறுப்பதோடு மட்டுமல்லாமல், வரலாற்றுச் சுவடிகளையே திருத்தி எழுத முனைகிறார்கள். நிற்க,

பாகிஸ்தான் உருவானதே, உலக வரலாறு ஏற்பட்ட காலமுதல், இன்றுவரை ஏற்பட்டிராத ஒரு அற்புதமாகும் எனக் கூறுவது மிகையாகாது. இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் பரவிக்கிடந்த ஏறத்தாழ பத்து கோடி முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு எழுப்பிய குரலின் உருபயன்தான் பாகிஸ்தான். விஸ்லம்பினாலும் அல்ல, வாள் பலத்தினாலும் அல்ல, துப்பாக்கியைக் காட்டியும் அல்ல பாகிஸ்தான் உருவெடுத்தது. ஆனால், ஒரு தனி மனிதனின் நாவசைப்பினாலும், முஸ்லிம் மக்களின் ஒருமித்த வாக்களிப்பினாலுமே பாகிஸ்தான் தோற்றம் தந்தது. வாக்குப் பெட்டி ஏற்படுத்திய புரட்சியில் பூத்த புதுமைதான் பாகிஸ்தான் தோற்றம் என்று கூறுவதே பொருந்தும்.

பாகிஸ்தான் தோன்றுவதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புதல் அளித்த பிறகுதான், மிச்ச இந்தியாவிற்கும் அரசியல் விடுதலை சாத்தியமாயிற்று. பாகிஸ்தான் இல்லையேல் சுதந்திர இந்தியாவும் என்றென்றைக்கும் கிட்டாது என்ற மகத்தான சரித்திர உண்மையைக் காங்கிரஸ் தலைவர்கள்—ஆங்கிலேயர் உணர்த்த—ஐயமற உணர்ந்த பின்னர்தான் பாகிஸ்தான் அமைப்புக்கு வேண்டா வெறுப்பாக இணங்கினர்.

முஸ்லிம் பொதுமக்களின் வாக்களிப்பு, அன்று அதிகாரத்திலிருந்த ஆங்கிலேயர் கண்களையும் திறக்கச் செய்தது; அவர்கள் மூலம் காங்கிரஸ் தலைவர்களின் பிடிவாதப் போக்கிற்கும் முடிவு கட்டியது. எனவே, பொதுமக்கள், வாக்குப் பெட்டிகளில் பதிவு செய்யும் தீர்ப்பின் பலனாக, ஒரு புத்தம் புதிய பாகிஸ்தான் நாடே தோன்றின அற்புதம் போலவே, கிழக்கு வங்கத் தேர்தலில் பங்கு கொண்ட பொது மக்களின் தீர்ப்பும் முன்னிலும் பெரியதோர் அற்புதத்தை உண்டாக்கி இருக்கிறது.

பாகிஸ்தான் தோன்றுவதற்கு முஸ்லிம் லீகின் இடைபடாத அரிய உழைப்புதான் காரணமாகும். அக்கோரிக்கை பிளீடுபட்ட முஸ்லிம் லீகிற்கு முஸ்லிம் மக்களின் முழு ஆதரவும் இருந்தது. முஸ்லிம் லீகில் சேராமல், அதை எதிர்த்து தேர்தலில் ஈடுபடும் எந்த ஒரு முஸ்லிமும், அவர் எவ்வளவு ஒழுக்க சீலராகவும், லட்சிய வீரராகவும் இருந்த போதிலும், தோல்வியுறுவது நிச்சயம் என்ற நிலை அன்று இருந்து வந்தது. தேர்தலில் அவர் தோற்றும் போவது மட்டுமல்லாமல், பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் தூற்றலுக்கும் பழிப்புக்கும் பாத்திரமாகி, சமூகப் பகைவராகவும் கொள்ளப்படும் நிலை சில ஆண்டுகளுக்குமுன் இருந்தது. ஆனால், ஆறு ஆண்டுகளுக்குள் லீகுக்கு இருந்துவந்த ஈடு இணையற்ற அந்த அரசியல் செல்வாக்கு, இன்று மணல் மேடு சரிவதுபோல் சரிந்துபோய் கிடக்கிறது. இந்த உண்மையைத்தான் கிழக்கு வங்கத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவு அறிவிக்கிறது.

முஸ்லிம் மக்களின் வாக்கு பலத்தால் பாகிஸ்தான் கிடைத்தது எவ்வளவு ஆச்சரியமோ, அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ஆச்சரியம் நிரம்பியுள்ளது, ஆறு ஆண்டுகளுக்குள்ளாக, அதிகாரத்தில் இருந்துவந்த முஸ்லிம் லீக் அதே பொதுமக்களால் ஏகோபித்து அலட்சியப்படுத்தப்பட்டு இருப்பதில்! முஸ்லிம் லீக் பெற்றுள்ள தோல்வி வியப்புக்குரியது மட்டுமல்ல, அதிர்ச்சியைத் தரக்கூடிய வரலாறு காணாத உண்மையுமாகும். இந்தத் தேர்தலின் முடிவு லீகிற்கு எதிராகத் தலைகீழாக மாறிவிட்டிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டென்றாலும், முக்கியமான இரண்டு காரணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஒன்று, மொழியைப் பற்றியது; மற்றொன்று, தன்மானத்தைப் பற்றியது.

கிழக்கு வங்கத்தில், முஸ்லிம்களுக்கும் சரி, இந்துக்களுக்கும் சரி, தாய் மொழியாக இருப்பது வங்க மொழியேயாகும்.

வங்க மொழியை ஆட்சி மொழியாக்கி, அதற்கு ஏற்றம் தேடுவதைத்தான் அந்த வட்டார மக்கள் விரும்புவர். ஆனால் இதற்கு மாறாக பாகிஸ்தான் மத்திய சர்க்கார் உருது மொழிக்கு சிறப்பளித்து, ஆட்சி மொழிக்கு அதற்கு முக்கியத்துவம் காட்டியது. இதை கிழக்கு வங்கம் முழு மூச்சாக எதிர்த்தது. தேர்தலில் லீகை வங்க மக்கள் உதறித் தள்ளிவிட்டதற்கு, இந்த மொழிப் பிரச்னையும் முக்கிய காரணம் என்று கொள்வது மறுக்க முடியாததாகும்.

இதை, இந்தியாவில் உள்ள இந்தி வெறியர்கள் கருத்தில் கொண்டு, இந்திக்கு ஏற்றம் தேடுவதில் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டுமென்று இடித்துரைக்கிறோம். மொழிப் பிரச்னையைச் சுட்டிக்காட்டி விடுவதோடு நேரு நின்றுவிட்டார். இரண்டாவதாக இருக்கிற கிழக்கு வங்கத்தின் தன்மானப் பிரச்சினையை எடுத்துக்காட்ட அவர் மறந்துவிட்டார்—இல்லை—வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துவிட்டார்.

பாகிஸ்தானின் மத்திய சர்க்கார் இருப்பிடமாக உள்ள கராச்சி நகரத்துக்கும் கிழக்கு வங்கத்துக்குமிடையே 2000 கல் தொலைவு உள்ளது. தொலைவு மட்டும் அல்லாமல், அந்த இடைவெளி இந்திய பூமியின் அதிகாரத்தில் இருக்கிறது. பாகிஸ்தான் மத்திய சர்க்கார், கிழக்கு வங்க விவகாரத்தை மாற்றாந்தாய் கண்கொண்டே கவனிக்கிறது என்ற நினைப்பு, கிழக்கு பாகிஸ்தான் மக்களிடம் வேர்விட்டுப்போய் இருக்கிறது. எல்லா நடைமுறைகளிலும் கிழக்கு வங்கத்தை அலட்சியப்படுத்தி, ஒதுக்கியே, பாகிஸ்தான் மத்திய சர்க்கார் நடக்கிறது என்ற வேதனை கிழக்கு வங்க மக்களிடம் குடிகொண்டுபோய் இருக்கிறது. அவர்கள் உள்ளத்தில் மூண்ட இந்தத் தன்மான உணர்ச்சி, இந்தக் கட்டத்தில், முஸ்லிம் லீகைத் தேர்தலில் தோற்கடிப்பதில் வந்து முடிந்திருக்கிறது. இந்த மன வேதனை மேலும் வளர்ந்தால், வேறு பரிகாரம் தேட வேண்டிய கட்டாயத்தில், கிழக்கு வங்க மக்களைக் கொண்டுவந்து நிறுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை.

விற்பனை வரிக்குக் கண்டனம்

நகை வியாபாரிகள் கமிட்டி முடிவு

சென்னை, மார்ச் 21—

தங்கம், வெள்ளி நகைகள், விலையுயர்ந்த கற்கள் முதலியவை கள்மீது சென்னை சர்க்கார் புதிதாக விதித்துள்ள விற்பனை வரியை ரத்து செய்யாவிட்டால் அடுத்த மாதம் 1, 2, 3 தேதிகளில் கடையடைப்பு செய்யவேண்டும் என்று தமிழ் நாடு நகை வியாபாரிகள் சம்மேளன காரிய கமிட்டி இன்று முடிவு செய்தது.

டெல்லி மக்கள் சபை உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 400 சம்பளம்?

தினசரி ரூ. 15 அலவன்ஸ்!

புதுடில்லி, மார்ச் 21—

டெல்லி சட்டசபை மெம்பர்களுக்கு மாதம் 400 ரூபாய் சம்பளமும் சட்டசபை கூட்டம் நடக்கும் நாட்களில் தினசரி 15-ரூபாய் அலவன்சும், இந்தியா முழுவதும் ஆண்டு பூராவும் இஷ்டமான இடங்களுக்கு பிரயாணம் செய்ய இரு 2-ம் வகுப்பு டிக்கெட்டுகளும், ஒரு 3-வது வகுப்பு டிக்கெட்டும் கொடுக்க மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது.

தற்போது டில்லி சட்டசபை கூடும் நாட்களில் மெம்பர்களுக்கு தினசரி 40 ரூபாய் அலவன்சும் முதல் வகுப்பு கட்டணம் ஒன்றேமுக்கால் மடங்கும் கொடுக்கப்படுகிறது.

குத்துச் சண்டையில் குழப்பம்!

கல்கத்தா, மார்ச் 21—

போர்ட் வில்லியம் என்ற இடத்தில் "டண்டி" மில்லருக்கும், பிராங் மெலிலோவுக்கும் நடந்த குத்துச் சண்டையில், டண்டி மில்லர், மெலிலோ மீது சரமாரியாகக் குத்துக்களை விட்டதில் மெலிலோவுக்கு மூக்கிலிருந்து இரத்தம் வழிந்ததுமல்லாமல், கண் இரப்பையும், புருவமும் கிழிந்து ஒன்றும் செய்ய முடியாத நிலைமைக்கு வந்துவிட்டார்.

உடனே மத்தியஸ்தர் குறுக்கிட்டுச் சண்டையை நிறுத்தி, "டண்டி" வெற்றி பெற்றதாக அறிவித்துவிடவே, காண வந்திருந்த ரசிகர்கள் சண்டை தொடர்ந்து நடைபெறவேண்டுமெனக் கூச்சலிட்டனர். இதை மத்தியஸ்தர் அனுமதிக்காததால் மேடை மீது கற்களும், சோடா புட்டிகளும் பறக்க ஆரம்பித்தன. போலீஸ் உதவியுடன் நிலைமை ஒருவாறு சமாளிக்கப்பட்டதெனத் தெரிகிறது.

தஞ்சை மாவட்ட தி.மு.கழக இரண்டாவது மாநாடு

வரவேற்புக் குழுச் செயலாளர் அறிவிப்பதாவது:—

தஞ்சை மாவட்ட தி.மு. கழக மாநாட்டுப் பந்தல் தஞ்சை முத்தமிழ் வள்ளல் ஏ. ஓய். ஏ. நாடார் தோட்டத்தில், 340×200 அளவில் போடப்பட்டு வருகிறது. இயக்க முக்கியஸ்தர்கள் நேரிலிருந்து கவனித்து வருகின்றனர்.

தென்னிந்திய ரயில்வே நிர்வாகத்தினர் அதிக ரயில் வண்டிகள் விட ஒத்துக்கொண்டிருக்கின்றனர். கடலூர், திருச்சி, நாகூர் ஆகிய இடங்களிலிருந்து புறப்படும் வண்டிகளில் அதிகமான பெட்டிகள் இணைக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

தபால் இலாகாவிலிருந்து தனியாக ஒரு அஞ்சல் நிலையம் மாநாட்டுக் கொட்டகையில் வைக்க ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்திருக்கின்றனர். தனியாக ஒரு டெலிபோன் வைக்க ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

மாநாட்டுக்கு முப்பதினாயிரம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பந்தலின் முகப்பில், மறைந்த தளபதி பன்னீர் செல்வம் அவர்களின் திருவுருவப் படத்தை ஏழு அடி உயரத்தில் செய்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புதுக் கல்வித் திட்ட ஆராய்வு

பருலேக்கர் குழுவி, குஆன செலவு!

சென்னை, மார்ச் 20—

இம்மாநிலத்தில் கொண்டு வரப்பட்ட தொடக்கக் கல்வியில் திருத்தப்பட்ட திட்டத்தை விசாரணை செய்யப் பேராசிரியர் பருலேக்கர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு நிறுவிய வகையிலும், பணியாற்றிய வகையிலும் மாகாண அரசாங்கத்திற்கு மொத்தம் ரு 2,744—8—0 செலவானதென்றும், இக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஊதியம் எதுவும் அளிக்கப்படவில்லையென்றும் சட்டசபையில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்ட கேள்வியொன்றுக்கு அமைச்சர் சி. சுப்பிரமணியம் பதிலளித்தார்.

பதுங்கிவிட்ட வருமானம் 125 கோடி ரூபாய் கண்டுபிடிப்பு!

விசாரணைக் கமிஷன், சுய அறிவிப்புத் திட்டத்தின் பலன்

புதுடில்லி, மார்ச் 23—

பதுங்கிக் கிடந்த வருமானத்தில் சுமார் 125 கோடி ரூபாய் வருமான வரி விசாரணைக் கமிஷன், சுய அறிவிப்புத் திட்டம் ஆகியவை மூலம் சென்ற ஆண்டு இறுதிவரை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக நிதி மந்திரியாலய ஆண்டறிக்கை கூறுகிறது.

விசாரணைக் கமிஷனுக்கு 1,668 வழக்குகள் விடப்பட்டதில் ரு 45 கோடி சம்பந்தப்பட்ட 1,031 வழக்குகள் டிசம்பருக்குள்ளாக பைசலாகி விட்டதாயும், பாக்கி ரு 80 கோடியும் சுய தகவல் திட்ட மூலம் வெளிப்பட்டிருப்பதாயும் அது புள்ளி விவரம் கொடுப்பதோடு, 1951 அக்டோபர் 22-ம் தேதியுடன் சுய அறிவிப்புத் திட்டம் நின்றுவிட்ட போதிலும், பதுக்கிய வருமானத்தை வரி நிர்ணய நடவடிக்கைகளின்போது வெளியிடத் தடையில்லை யென்பதையும், இத் திட்டத்தால் ஏராளமான பணம் வெளியானதோடு, வருமான வரி இலாகாவுக்கும் வரி செலுத்துவோருக்குமிடை நல்லுறவேற்படவும் உதவியிருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

கேள்வி:

1 ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், மாநில சர்க்கார்களுக்கு கடன் அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை;—
 (அ) 312 கோடி ரூபாய்
 (ஆ) 289 கோடி ரூபாய்
 (இ) 247 கோடி ரூபாய்

2. திட்டக் கமிஷனின் அக்கிராசனர் யார்?
 (அ) குல்சாரிலால் நந்தா
 (ஆ) டி. டி. கிருஷ்ணமாச்சாரி
 (இ) ஜவஹர்லால் நேரு

3. 'கோ சதன்' என்பது என்ன?
 (அ) வயதான, பலவீனமான, உபயோகமற்ற கால்நடைகளைப் பிரித்து வைக்கப்படும் ஒரு இடம்.
 (ஆ) பால் விற்பனை செய்யப்படும் ஒரு இடம்
 (இ) தானமாகக் கொடுக்கப்படும் பசுக்களைப் பராமரித்துவரும் ஒரு பரோபகார நிலையம்.

4. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் பயனடைந்துவரும் கிராமவாசிகளின் மொத்த எண்ணிக்கை:
 (அ) சுமார் 225 லட்சம்
 (ஆ) சுமார் 300 லட்சம்
 (இ) சுமார் 380 லட்சம்

5. பாக்ரா அணை எந்த நதியின் தண்ணீரைத் தேக்கி வைக்கிறது?
 (அ) ரவி
 (ஆ) சட்லஜ்
 (இ) சேனுப்.

விடைகள்:

1—(ஆ); 2—(இ); 3—(அ); 4—(இ); 5—(ஆ).

பெயர் சூட்டல்

மாயூரம், மார்ச் 19—

மாயூரம் லெட்சுமி போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் தோழர் கே. பக்கிரிசாமி அவர்கள், நேற்றிரவு தமது துணைவியாருக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு "கருணாநிதி" என்று பெயரிட்டுள்ளார்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

— (:) —

எதிர்தரப்பில் 5 தோழர்கள் வாக்குமூலம்

திருநெல்வேலி, மார்ச் 20—

தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி, மற்றும் 94 பேர்கள்மீது போலீசார் தொடர்ந்த சதி வழக்கில், விடுதலை செய்யப்பட்ட 15 பேர்கள் நீங்கலாகப் பாக்கியுள்ளவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யப்படும் நடவடிக்கை நேற்று முதல் விசேட மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு ஆரம்பமாயிற்று.

முதல் 5 எதிரிகளான தோழர்கள் கே. வி. கே. சாமி, எம். இரத்தினம், தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி; எஸ். நடராசன் ஆகியவர்கள் அளித்த வாக்குமூலங்கள் கீழே தரப்பட்டுள்ளது.—

தோழர் கே. வி. கே. சாமி

முதல் எதிரி தோழர் கே. வி. கே சாமி மாஜிஸ்திரேட் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லும் போது கூறியதாவது:—

"தி. மு. கழகத்திற்கு நான் சாதாரண உறுப்பினரே தவிர, நிர்வாகக் கமிட்டியில் யாதொரு பொறுப்புள்ள பதவி உடையவனல்ல; நாகம்மாள் வாசகசாலை என்ற பெயருடைய வாசகசாலையே அந்த இடத்தில் இடையாது; தூத்துக்குடியிலேயே இந்தப் பெயருடைய வாசகசாலை இடையாது; நாகம்மாள் ஞாபகார்த்த பகுத்தறிவுக் கழகம் என்றிருக்கிறது; அக்கழகத்திற்கும், தி. மு. கழகத்திற்கும் யாதொரு விதமான சம்பந்தமோ உறவோ இடையாது; தனிப்பட்ட முறையிலோ, தி. மு. கழகத்தின் முன்னேற்ற முறையிலோ நான் அங்கு சென்றதே இடையாது; எங்களுக்கும் அவர்களுக்கும் உறவோ தொடர்போ இடையாது; அவர்கள் எங்களை அனுமதித்ததும் இடையாது; தி. மு. கழகத்திற்கு ஒரு தலைமை காரியாலயம் 19—ஏ பெரிய கடைத் தெருவில் உண்டு; தி. மு. கழகம் பொருட்டு செயல்பட வேண்டுமேயானால் அந்த இடத்தில்தான் எங்கள் கமிட்டி கூடுவது வழக்கம்; அதிகப்படியான உறுப்பினர்கள் பேச சந்தர்ப்பம் ஏற்பட்டால் வடக்கூர் பார்க்கைப் என்ற திறந்த இடத்தில் வைத்துதான் நடக்கும்; அந்த இடத்தை தி. மு. க. அனுபவித்து வருகிறது; 14—7—53 இரவு நாகம்மாள் வாசகசாலையில் நடந்ததாகக் கூறப்படும் கூட்டம் நடக்கவில்லை; நான் அங்கு போகவும் இல்லை; அரசாங்கத் தரப்பு சாட்சிகளெல்லாம் பார்ப்பனர் வீடுகளில் வேலை செய்யும் காரணத்தாலும், பிராமண சங்கத்திலுள்ள முக்கியஸ்தர்கள் தூண்டுதலாலும், ஆதரவாலும் எங்கள்மீது வீணான பொய்ச் சாட்சியம் அளித்துள்ளனர்.

"தூத்துக்குடியில் ரயில் நிறுத்தம் போராட்டமானது ஆச்சாரியாரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து செய்யப்பட்ட கிளர்ச்சியல்ல—இந்தியாவின் முதல் மந்திரி நேரு திராவிடப் பொதுமக்களைப் பார்த்து, 'நான்சென்ஸ்', 'முட்டாள்கள்' என்று கூறியதை முன்னிட்டு திராவிட மக்கள் மனம் புண்பட்டுப் போயிருக்கிறார்கள்; அதை முதல் மந்திரி நேரு உணர வேண்டும்; முதல் மந்திரி நேரு உணரும் பொருட்டு ரயில் நிறுத்தக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று சென்னை தி. மு. கழக நிலையம் முடிவு கட்டியது; அந்த முடிவு திராவிட மக்களின் ஏகோபித்தக் கட்டிய முடிவாகும்; 14—7—53-ல் இரவு 8-15 மணிக்கு நாடார் தெருவிலுள்ள எனது வீட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கே. காமராசருக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது ஒரு கான்ஸ்டபிள் என்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் கூப்பிடுவதாகக் கூட்டிச் சென்றார்; நான் போனவுடன், உன்னை செக்ஷன் 151-படி கைது செய்திருக்கிறேன்,' என்று கூறி, என்னைக் கைது செய்தார்; நான் காமராஜருக்குக் கடிதம் எழுத வேண்டிய காரணம், நான் தலைமை தாங்கிவரும் உப்புத் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவுக்கு வருவதாக அவர் ஒப்புக்கொண்டிருந்தார்; அந்த விழா தேதி நிர்ணயிப்பதற்காகவே நான் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன்; தி. மு. கழக லட்சியம் திராவிடநாடு அடைய வேண்டுமென்ற ஒரே குறிக்கோளாகும்; இதை அடைவதற்கு நாட்டிலே உள்ள மக்களிடத்தில் பகுத்தறிவைப் பரப்பி, உண்மை நிலையை எடுத்துக் கூறி, அஹிம்சையின் முறைப்படி கண்ணியம், கட்டுப்பாடு, கடமை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு தொண்டாற்றுவதுதான் எங்கள் லட்சியம்; பலாத்காரத்திலோ, தனிப்பட்ட எந்த வகுப்பாரின் மீது துவேஷத்திலோ இது வரை தொண்டாற்றியதுமில்லை; யாதொரு விதமான பலாத்காரங்கள் செய்வதற்கு ஈடுபட்டதுமில்லை; இந்த நோக்கத்தின்படியே ரயில் நிறுத்தக் கிளர்ச்சியானது 15—7—53க்கு சமார் 15 நாட்களுக்கு முன்னதாகவே விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது; தூத்துக்குடியில் நடந்த அப்பாக்கிப் பிரயோகத்தை முன்னிட்டு தூத்துக்குடி போலீசார் தங்கள் தவறை மறைக்கவும் எங்கள் மீது பொய்யான வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள்; முதல் மந்திரி ஆச்சாரியார் 'திராவிட இயக்கத்தை ஒழித்துக் கட்டியே தீருவேன்' என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவரிடம் போலீஸ் நிர்வாகம் இருக்கிற காரணத்தால் அதே போலீஸ் நிர்வாகத்திலுள்ளவர்கள் எங்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகளை ஜோடித்திருக்கிறார்கள்."

தோழர் எம். ரத்தினம்

இரண்டாவது எதிரி தோழர் என். ரத்தினம் தமது வாக்குமூலத்தில் சொன்னதாவது:

"நான் தி. மு. கழகத்தில் சாதாரண உறுப்பினர்; எந்தவிதமான பொறுப்பும் எனக்குக் இடையாது; பிராசிகியூஷன் தரப்பு 3, 4, 5, சாட்சிகளை யாரென்று எனக்குத் தெரியாது; தூத்துக்குடி முக்கிய பிராமணர்களின் தூண்டுதல் மீது அவர்கள் பொய்யான சாட்சியம் சொல்லியிருக்கிறார்; நாகம்மாள் வாசகசாலை என்று இடையாது; நாகம்மாள் பகுத்தறிவுக் கழகம் என்று ஒன்று இருக்கிறது; அதற்கும் தி. மு. கழகத்திற்கும் சம்பந்தம் இடையாது; 14—7—53 இரவு 8 மணிக்கு நான் கடையில் வியாபாரம் செய்துக் கொண்டிருந்தபோது என்னைக் கைது செய்தார்கள்; தி. மு. க. இயக்கம் சதி, பலாத்காரம் போன்ற காரியங்களின் மீது நம்பிக்கையில்லாத இயக்கம்; அஹிம்சையான முறையில் 15ந் தேதி ரயில் நிறுத்தம்செய்ய வேண்டுமென்று ஜூலை 1ந் தேதியிலிருந்தே பத்திரிகைகளில் வந்திருந்தது."

தோழர் தங்கப்பழம்

மூன்றாவது எதிரி தோழர் தங்கப்பழம் அளித்த வாக்குமூலத்தில் சொன்னதாவது:

"சாட்சிகள் கூறியிருப்பது முழுவதும் பொய்; சதி நடந்ததாகக் கூறப்படும் 14—7—53 முழுவதும் நான் தூத்துக்குடி நகரிலேயே இல்லை; அன்று இரவு 1 மணிக்குத்தான் திருமங்கலத்திலிருந்து வந்து சேர்ந்தேன்; அதற்கு முன்பு போலீசார் என்னைத் தேடியதாக நான் கேள்விப்பட்டேன்; 15—7—53-ல் தூத்துக்குடி ரயில்வே நிலையத்தில் என்ன நடக்கிறதென்று பார்க்கப்போகும்போது சப்-இன்ஸ்பெக்டர் மாமன்கான் என்னை டிப்டி சூப்பிரண்டு கூப்பிடுவதாகக் கூட்டிச் சென்றார்; அங்கே தோழர் நடராசன் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தார்; சதி நடந்ததாகவோ, நான் சதியில் கலந்து கொண்டதாகவோ கூறுவது முழுவதும் பொய்; ரயில் நிறுத்தக் கிளர்ச்சிக்குப் பொறுப்பாளியான தி. மு. கழக செயலாளர் சி. என். அண்ணாதுரை மீதும், மற்றும் தலைமை நிலையத்தின் நிருவாகக் குழு உறுப்பினர் எவர் மீதும் சதி வழக்குப் போடவில்லை; தூத்துக்குடியில், சாதாரண அங்கத்தினர்கள்மீது ரயில் நிறுத்தக் கிளர்ச்சி சம்பந்தமாக சதி வழக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டும்."

தோழர் சிவசாமி

நான்காவது எதிரி தோழர் சிவசாமி தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:—

"சாட்சிகள் சொல்வது பொய்; நாகம்மாள் வாசகசாலை என்று இல்லை; சதியொன்றும் நடக்கவில்லை; ரயில் நிறுத்தக் கிளர்ச்சி சதி மூலம் நடக்கவில்லை; நான் பிராமணத் துவேஷி இல்லை; தி. மு. கழகமும் பிராமணர்கள் மீது துவேஷம் கொண்ட கட்சியல்ல; எங்கள் கட்சி பிராமணீயத்திற்குத்தான் எதிர்ப்பு கொண்டது; எனக்கு பிராமணர்கள் பலர் நண்பர்கள்; நான் பிராமணர்களைத் தாக்குவதற்குத் தூண்டிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருப்பது பொய்க் குற்றம்; தூத்துக்குடி தி. மு. கழகத்தைச் சதிக் குற்றத்திலும் பலாத்காரக் குற்றத்திலும் புகுத்தியிருப்பது பழிவாங்கும் நோக்கத்துடன் செய்த செயலேயாகும்."

தோழர் நடராஜன்

ஐந்தாவது எதிரி நடராஜன் தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:—

"தூத்துக்குடி தி. மு. கழக காரியதரிசி நான்தான்; எதிரிகள் 1 முதல் 4 பேர் சாதாரண உறுப்பினர்கள்தான்; முக்கியஸ்தர்களல்ல; சாட்சிகள் எங்களைப் பற்றி நாங்கள் செய்ததாகச் சொன்னதெல்லாம் பொய்; சதி செய்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை; எங்கள் கட்சி ஆபீஸ் பெரிய கடைத் தெரு 19-ஏயில் இருக்கிறது; என் பார்வையில் இருப்பது; 14—7—53-ல் நான் கூட்டிய கூட்டம் வடக்கு பார்க்கில் நடத்தப்பட்டது; நான் சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறேன்; எல்லா கிளைகளுக்கும் 'சர்க்குலர்' அனுப்பியிருக்கிறேன்; அது கோர்ட்டில் தாக்கலாயிருக்கிறது; 15-7-53 காலை, நானும் 200 பேரும் ரயில் முன்பு தூத்துக்குடி மேலூர் ஸ்டேஷனில் உட்கார்ந்ததாகச் சொல்வது பொய்; மேலூர் ஸ்டேஷனில் இருந்தவர்கள் தி. மு. கழகக் கட்சி தொடர்பு உடையவர்கள் அல்லர்; நானும், மற்றவர்களும் 15—7—53 காலை தூத்துக்குடி கீழூர் ஸ்டேஷனில் டிக்கட் பெற்று இருந்தோம்; அப்போது வாசலில் இருந்த டிப்டி சூப்பிரண்டு என்னைக் கைது செய்தார்; என்னைப் போலீசார் பின்னர் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் அங்கே கூடியிருந்தவரைக் கலைந்து போகும்படி சொல்லச் சொன்னார்கள்; 'ரயில் முன் உட்கார்ந்திருந்தவர்கள் எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களல்ல; என் அப்படியிருந்தார்களென்று எனக்குத் தெரியாதே'ன்று போலீஸ் டிப்டியிடமும், சப்-கலெக்டரிடமும் சொன்னேன்; ஜில்லா கலெக்டர் வந்தார்; அவர் என்னையும் தாசில்தாரையும் மீண்டும் போய்க் கூட்டத்தைக் கலைந்து போகும்படி கேட்கச் சொன்னார்கள்; அவ்விதமே கேட்டுக் கொண்டோம்; உட்கார்ந்தவர்கள் எழுந்துபோக மறுத்துவிட்டார்கள்; ஜில்லா கலெக்டர் மற்ற அதிகாரிகளுடன் கலந்து பேசினார்; சில நிமிடத்திற்கெல்லாம் தடியடிப் பிரயோகம் நடந்தது; கூட்டம் கலையவில்லை; பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது; அந்தக் கூட்டத்தில் எனக்கும் போலீசாரால் அடி கிடைத்தது; நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்று விட்டேன்; பிராமணர்கள் வீட்டுக்கொள்ளை முதலியவை, பாலம் நிலைப்பு சம்பந்தமான சாட்சியங்களெல்லாம் பொய்; பல முக்கியமான சந்தர்ப்பங்களில் தி. மு கழகம் சர்க்காருக்கு ஒத்தாசை செய்திருக்கிறது; எங்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் தூத்துக்குடி நகரில் மாத்திரம் விரோதம் உண்டு; இது நகர சபை தேர்தல் சம்பந்தமானது; இந்த சதி வழக்கு விரோதத்தால் பொய்யாக உருவாக்கப்பட்டிருக்கிறது."

திருச்செந்தூர் தாலுகா (வட்டம்) தி.மு.க.தேர்தல்

14—3—54 மாலை 4 மணிக்கு திருச்செந்தூர் நகர கழக அலுவலகத்தில், தாலுகா கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, 1954-ம் ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

எஸ். மெய்கண்டான் — செயலாளர்; சு. கெங்கை ஆதித்தன்— துணைச் செயலாளர்; பி. எஸ்.கே. ஜெயபால்—மாவட்டப் பிரதிநிதி.

பின்னர், தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி, எம். என். ராய், அருப்புக்கோட்டை முத்து, என். ஆர். சாமியப்பா ஆகியோர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், தாலுகா கமிட்டியின் தலைமை அலுவலகம் திருச்செந்தூரிலேயே இயங்கவேண்டுமென்றும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கைத்தறி நெசவாளர் தினம்

——

வந்தவாசி, மார்ச் 20—

கைத்தறி நெசவாளர் தினம் 12—3—54 வெள்ளி மாலை 6 மணிக்கு வந்தவாசி ஈஸ்வரன் கோயில் முன்புறத்தில் கைத்தறியாளர் உற்பத்தி விற்பனை சங்கத்தாரால் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தாசில்தார் நாராயணசாமி ஐயர் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் வி. கே. வேணுகோபால் ஐயங்கார் கைத்தறியாளர் துயரம் போக்கவேண்டுமானால் மில் துணிகளுக்கு தடை விதித்துத்தான் ஆகவேண்டும் என்றும், சுதேசி இயக்கத்தின்போது, எவ்வாறு மேல்நாட்டுத் துணிகளைப் பகிஷ்கரித்தோமோ அதே முறையில் இப்பொழுதும் மில் துணிகளைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்றும் கூறினார்.

பின்னர், தோழர்கள் வி. டி. அண்ணாமலை, புலவர் கோவிந்தராஜு, எம். வடிவேல் ஆகியோர் பேசினர்.

நகரசபை உறுப்பினர் பதவி இழந்தார்

"உமேலை நகராண்மைக் கழக உறுப்பினர், கே. பாலசுப்ரமணியம் என்பவர் நகர சபைக்கு வரியாக தன்னால் செலுத்தப்பட வேண்டிய ரூ. 9-0-3-ஐ நாளது வரை செலுத்தப்படாத காரணத்தால், 7—3—54 தேதி முதல் தனது நகர சபை அங்கத்தினர் பதவியை இழந்துவிட்டார் என்று நகரசபை கமிஷனர் உத்திரவிட்டிருக்கிறார்," என்று உமேலை தோழர் எஸ். மருதமுத்து அறிவிக்கிறார்.

மே மீ முதல் நாள் வெளிவருகிறது

பண்டைத் தமிழும், தமிழில் மலர்ந்த, பண்ணிகர் தெலுங்கு, துளு மலையாளம், கன்னடநிகர், கன்னடமெனும் மொழிகள், கமழக் கலைகள் சிறந்த—திராவிடத்தின்

ஆங்கில வார இதழ் 'ஹோம்லண்ட்'!

★

திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகளை நாட்டினர் அறிய நல்லதோர்—

ஆங்கில வார இதழ் 'ஹோம்லண்ட்'!!

★

அண்ணாவை ஆசிரியராகக் கொண்ட

ஆங்கில வார இதழ் 'ஹோம்லண்ட்'!!!

HOMELAND

தனி இதழ் இரண்டு அணா

எல்லா ஊர்களிலும் பிரதி ஒன்றுக்கு எட்டு அணா முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் உடனே விண்ணப்பித்துக்கொள்ளவும்.

ஆண்டு சந்தா ஆறு ரூபாய்

விபரங்களுக்கு:—

உரிமையாளர், S. S. P. லிங்கம்,

'ஹோம் லண்ட்' அலுவலகம்,

6-F, வாரன் ரோட், பீமன்பேட்டை, சென்னை-4.

தூத்துக்குடி — கல்லக்குடி வழக்கு நிதி வசூல்

★

தூத்துக்குடி, கல்லக்குடி வழக்கு நிதிக்கு வசூல் செய்து ரூபாய் வைத்துக் கொண்டிருக்கும் நண்பர்களும், கிளைக் கழகத் தோழர்களும் உடனே வசூல் ரூபாய் வரவு விபரங்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

"பொதுக் கூட்டங்கள், நாடகங்கள் வசூல் மூலம் ரூபாய் எங்களிடம் வந்திருக்கிறது; விரைவில் அனுப்பி வைக்கின்றோம்," என்று கடிதம் எழுதிய தோழர்கள், நாளதுவரை பல கடிதங்கள் எழுதியும் ரூபாய் அனுப்பாமல் அலட்சியமாக இருக்கிறார்கள்.

1954 மார்ச் முடிய கணக்குகள் வரவு - செலவு முடிக்க வேண்டியிருப்பதால், இனியும் காலம் கடத்தாமல் உடன் அன்புடன் ரூபாய் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

இதுவரை தூத்துக்குடி, கல்லக்குடி வழக்கு நிதிக்காக வசூலிக்கப்பட்டு, தலைமைக் கழகத்திற்கு ரூபாய் வந்து சேர்ந்துள்ளவைகட்கு வசூல் விபரம் "நம் நாடு" இதழில் இனி தொடர்ந்து வெளியிடப்படும்,

தூத்துக்குடி, கல்லக்குடி வழக்கு நிதிக்காகப் பொது மக்களிடம் இனி வசூலிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதுவரை வசூலிக்கப்பட்ட தொகைகளை மட்டும் நம் தோழர்கள் இனியும் காலம் கடத்தாமல் உடனே அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களை பொதுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு, மேற்படி நிதிக்கு உதவுவதாக வாக்களித்த தோழர்களும் வசூலித்த தொகையை இங்கு அனுப்பி வைத்து விடலாம். உடல் நலம் பெற்றதும் தேதி குறிப்பிடுவார்கள்.

தி.மு.க. தலைமை நிலையம்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13.

பொறுப்பாளர்,
தூத்துக்குடி, கல்லக்குடி
வழக்கு நிதி

கழகக் கூட்டம்

24—3—54 புதன் கிழமை மாலை 6-மணிக்கு வைத்தீஸ்வரன் கோவில் மேல வீதியில் தோழர் முத்துகிருட்டினன் தலைமையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

தமிழாசிரியர் கழக அவசரக் கூட்டம்

அண்மையில் நடந்த எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்தலில் அளித்த தமிழ் வினாத்தாள்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்து, தங்கள் கருத்தை அரசாங்கத்துக்கு அறிவிக்க உறுப்பினர்கள் கோரினதற்கிணங்க, 24—3—54 மாலை 5-30 மணிக்கு தங்கசாலைத் தெரு, எண் 213, சித்தானந்த மெடிகல் ஹால் மாடியில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

குலதர்மக் கல்வியின் கைவரிசை!

திருநெல்வேலி, மார்ச் 22—
திருநெல்வேலி மாவட்ட போர்டு நிர்வாகத்தின் கீழுள்ள சுமார் 700 ஆசிரியர்கள் ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தின் விளைவால் நீக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

இவர்கள் ஜூன் மாதத்தில் இருந்து வேலை இழக்க கூடும்.

புதிய கல்வித் திட்டம் சென்ற ஆண்டு அமுல் நடத்தப்பட்ட போது, படிப்படியாக சுமார் 100 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நீக்கப்பட்டனர்.

புதிய கல்வித் திட்டம் பற்றிய பருலேகர் கமிட்டி சிபார்சுகள் இவ்வாண்டு அமுலாவதை யொட்டி மேலும் 700 பேர்கள் வேலையிழக்க நேரிடும். ('தி. த.')

மதுவிலக்கு:

ஆந்திர சர்க்கார் முடிவு

கர்னூல், மார்ச் 22—
ஆந்திர மாநில முழுவதும் பதனீர் இறக்கவும், விற்பனை செய்யவும் அனுமதிப்பது என்று ஆந்திர சர்க்கார் முடிவு செய்தது.

பதனீர் இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கும் வேலையை பஞ்சாயத்து போர்டுகளிடம் விடப்படும்.

மரமேறிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகவே இந்த முடிவு செய்யப்பட்டதாக ஆந்திர சர்க்கார் தெரிவித்தது.

புதுடில்லி, மார்ச் 22—
வானிலை ஆராய்ச்சி நடத்த டேபின்தீவை 25 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குத் தரும்படி இந்திய சர்க்கார் கேட்டிருந்ததை பர்மிய சர்க்கார் நிராகரித்துவிட்டது.

வி. வி. இராமசாமி நன்றி அறிவிப்பு

★

சென்னை மேல் சட்டசபைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் எனக்கு வெற்றி கிடைக்குமாறு ஆதரவளித்த சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறிப்பாக எனது அபேட்சையை ஏற்றுக்கொண்டு ஆதரித்த திராவிட சட்டசபைக் கட்சித் தலைவர் அவர்களுக்கும் அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது வணக்கமும், நன்றியும் உரித்தாகுக. நாடு நலம் பெறவும், மக்கள் நல்வாழ்வு பெறவும் பணி புரிவேன் என்று பொதுமக்களுக்கு உறுதி கூறுகின்றேன்.

சென்னை,
23—3—'54

V. V. இராமசாமி,
(விருதுநகர்)

'உழுபவன் உழுத்துப்போக இடந்தராதீர்!'

—(:)—

திரு.—கொச்சி ராஜப் பிரமுகர் வேண்டுகோள்

திருவனந்தபுரம், மார்ச் 22—
குத்தகைக்கு நிலமெடுக்கும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், நியாயமான குத்தகையை நிர்ணயித்தும் சட்டமியற்றுங்கள்; நிலத்தை உழுபவனுக்கு: விளைச்சலில் அதிக பங்கு கிடைக்கும்படி செய்யுங்கள்; ஒரு சிலரிடம் ஏராளமான நிலம் சிக்கிக் கொண்டிருக்காமல் இருக்க, அதிக பட்ச நிலவுடைமையை நிர்ணயம் செய்யுங்கள்; இதற்கெல்லாம் மசோதா கொண்டு வந்து நிறைவேற்றுங்கள்,"

—என்று திரு—கொச்சி புதிய சட்டசபை முதல் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், ராஜப் பிரமுகர் சொன்னார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"நிலமற்ற விவசாயிகளுக்கு நிலமளிப்பது பற்றி அரசாங்கத்துக்கு சிபார்சு செய்ய ஒரு கமிஷனை சர்க்கார் நியமிக்கவிருக்கிறது; 14 வயதுவரை எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிப்பது பற்றி சர்க்கார் கவனிக்கும்; தொழில் அபிவிருத்தியிலும் சர்க்கார் அதிக கவனம் செலுத்தும்," என்றார்.

உணவு உற்பத்தி பெருக்கத்திற்கான சில யோசனைகளையும் அவர் தெரிவித்தார்.

திண்டுக்கல் நகர மன்ற[ம்]

தோழர் பி. சமதர்மம் தீர்மான[ம்]

அடுத்துவரும் திண்டுக்கல் நகர மன்றக் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானத்தை தோழர் பி சமதர்மம் அவர் பிரேரேபித்திருக்கிறார்.

(1) நகரமன்றத்தின் பானகல் படிப்பகத்திற்கு 'நம் நாடு' நாளிதழ் ஒன்று வாங்கிப்போடுவதென இம்மன்றம் தீர்மானிக்கிறது.

(2) நகரில் உள்ள சிற்றுண்டி உணவு விடுதிகளில் தீண்டாமையைக் காட்டும் விதத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனியிடம் ஒதுக்கி, உணவுகள் வழங்குவதாகத் தெரிவதால், தனியிடம் ஒதுக்கும் விடுதிகளுக்கு உரிமை ஆணை (லைசென்ஸ்) கொடுக்கக் கூடாது என்றும் இம்மன்றம் தீர்மானிப்பதுடன், இந்திய அரசியல் சட்டத்திற்கு தனி இடம் ஒதுக்குமுறை விரோதமாகத் தெரிவதால், தகுந்த நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கவேண்டுமென நகர போலீஸ் அதிகாரிகளை இம்மன்றம் கேட்டுக்கொள்வதென தீர்மானித்திருக்கிறது.

46 லட்சம் டன் அதிக அரிசி

நடைமுதல் ஆண்டில் கிடைக்கக் கூடும்

புதுடில்லி, மார்ச் 22—
1953—54ம் ஆண்டில் 7 கோடி 66 லட்சம் ஏக்கர் நிலத்தில் அரிசி உற்பத்தி செய்யப்படுவதில் 2 கோடி 71 லட்சம் டன் அரிசி கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

சென்ற ஆண்டு 7 கோடி 42 லட்சம் ஏக்கரில் 2 கோடி 25 லட்சம் டன் அரிசி கிடைத்ததென்றும், அதாவது 46 லட்சம் டன் அரிசி அதிகம் கிடைக்கலாமென்று அறிவிக்கப்படுகிறது.

கிராமக் குடி தண்ணீர் திட்டம்

சென்னை, மார்ச் 22—
கிராமக்குடி தண்ணீருக்கு 1948-லிருந்து சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறது; இது ஐந்தாண்டுத் திட்டத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது; 1954-லிருந்து 1956ம் ஆண்டுவரை 2,500 கிணறு தோண்டும் வேலைகள் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; இவ்வாண்டு வரவு—செலவில் 40 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது."

இவ்வாறு, சென்னை சட்ட சபையில் சுகாதார மந்திரி தெரிவித்தார்.

கவர்னரின் மனவேதனை

★

ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 22—
"மக்கள் பெருக்கத்தைத் தடுக்க வேண்டும் என்பதை ஆதரிப்பவர்களில் நானும் ஒருவன்; பிரசவ விடுதிகளில் நான் தொட்டில்களைப் பார்க்கும் போதெல்லாம், 'அவை எப்போதும் நிரம்பாமல் காலியாகவே இருக்கவேண்டு'மென்று வாழ்த்தி வந்திருக்கிறேன்,"

என்று இங்கு ஒரு மருத்துவ விடுதியைத் திறந்துவைத்துப் பேசுகையில், சென்னை கவர்னர் பிரகாசா கூறினார்.

ஆந்திர ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழு

டாக்டர் குப்புசாமி தலைவர்

மதனப்பள்ளி, மார்ச் 22—
மைசூர் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் பி. குப்புசாமி என்பவர் ஏப்ரல் 1-ந் தேதி முதல் ஆந்திரா ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் கமிஷனின் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று தெரிகிறது.

விழுப்புரம் வரையில் மின்சார ரயில்!

சென்னை, மார்ச் 22—
பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலையில் தொழில் நுணுக்க பயிற்சி பள்ளிக் கூடத்தை உதவி ரெயில்வே மந்திரி திறந்துவைத்துப் பேசுகையில், சென்னையிலிருந்து தாம்பரம் வரை தற்போது உள்ள மின்சார ரெயில்வே சர்வீஸை விழுப்புரம் வரை விஸ்தரிக்க ஆலோசிக்கப்படுவதாகவும், அடுத்த 5 ஆண்டுகளில் 1,200 மைல் தூரத்திற்குப் புதிதாக ரயில் பாதை போடப்படும் என்றும் தெரிவித்தார்.

"முன்னேற்றத்திற்குப் பார்ப்பனீயம் முக்கிய முட்டுக்கட்டை!"

"ஜாதி முறை உள்ளவரை தீண்டாமை நீங்காது"

மந்திரி ஜெகஜீவன்ராம் அறிவுரை

"தாழ்வு மனப்பான்மையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் கைவிட வேண்டும்"

ஆக்ரா, மார்ச் 22—
"நான் பிராமணருக்கு, விரோதியல்ல; எனினும், நம சமூகத்தின் முன்னேற்றத்துக்கு பார்ப்பனீயமே முக்கிய முட்டுக்கட்டையெனக் கருதுகிறேன்; தற்போதைய சமூகம் சீர்கெட்டதற்கு அதுதான முக்கிய காரணம்; தாழ்வு மனப்பான்மையைக் கைவிட்டுவிடுமாறு நான் அரிசன மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்,"

—என்று, மந்திரி ஜெகஜீவன் ராம் இங்கு நடைபெற்ற அரிசன கூட்டமொன்றில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது.

"ஜாதி முறை நீடிக்கும் வரை தீண்டாமையை நீக்க முடியாது; இந்து சமுதாயம் சீர்பட வேண்டுமானால் தற்போதுள்ள ஜாதி முறையை கூடிய சீக்கிரம் ஒழிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்," என்றார்.

500 ஆண்டுகளாகியும் அழியாத பிரேதம்!

இன்பக் களையுடன் இளவரசியின் தோற்றம்!

சாண்டியாகோ, (சிலி) மார்ச் 20—
16,000 அடி உயரமுள்ள எல் போமா மலை உச்சியில் இருக்கும் ஆண்டிஸ் ஐஸ் குகையில் அமார் 500 ஆண்டு காலமாகப் புதைபுண்டிருந்த 'இன்கா' அரச குடும்பத்தைச் சேர்ந்த 12 வயது இளவரசியின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த இளவரசியின் முகத்தில் இன்றைய நிலையிலும் இன்பக் களை தோன்றுகிறதாம்! கருப்பு நிறமுள்ள கவுனும், வெள்ளிநகைகளும் இவ்விளவரசி அணிந்திருந்தாளாம். முகத்தில் பவுடர்கூட பூசியிருந்தாளாம். அவருடைய முகத்தைத் தொட்டபோது பூசியிருந்த பவுடர் கையில் ஒட்டிக் கொண்டதாம். இளவரசியின் கையில் வைத்திருந்த பையில் சிவப்புக் கிளியின் இறகுகளும், நகம் வெட்டும் கருவியும் இருந்ததாம். அவள் பிரேதத்தைச் சுற்றி பொன், வெள்ளி சாமான்கள் இருந்ததாம் விஞ்ஞானிகள் இப்பிரேத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. 'சிலி' சர்வகலாசாலைக்கு இப்பிரேதம் கொண்டு போகப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் உல்லாச[ப்] பிரயாணம்

பெண்ணாடம், மார்ச் 20
இவ்வூர் கழக உயர்நிலைப்பள்ளியின் முதற் படிவத்தில் பயிலு[ம்] 56 மாணவர்களும்; 8 மாண[விகளும்], 8 ஆசிரியர்களும் 12-3-[54] பிற்பகல் 4 மணிக்கு உல்லாசப் பிரயாணமாகக் கடலூர் புதிய பட்டினத்திற்குச் சென்று திரும்பினர்.

ஆலந்தூர் தி. மு. கழகம்

17—3—54 இரவு நடைபெற்ற செயற் குழுவில், தோழர்கள் எம். என். ராய், வி. வி தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்வதுடன், ஏப்ரல் மாதத்தில் தோழர் கருணாநிதியை கொண்டு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு ஆலந்தூர் தி. மு. கழகச் சார்பில் ரூ 25 அனுப்ப வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், செயலாளர் இரா. கோதண்டராமன் அவர்கள் விலகல் கடிதமும் அங்கீகரிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ் செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறி... நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.